
Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 45 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | நவம்பர் 16, 2020



## வவுனியாவில் பெண் ஒருவருக்கு கொரோனா

டுபாய் நாட்டிலிருந்து திரும்பிய நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெறும் பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது,

இன்று யாழ் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 118 பேருக்கு பீ.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்டது. இதன்போது டுபாய் நாட்டில் இருந்து நாடு திரும்பிய பெண்மணி ஒருவர்

தற்போது வவுனியா பொது வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் 03



## கார்த்திகை 27 மாவீரர் நாள் நினைவேந்த தடை

### மீறினால் சட்டம் பாயுமென இராணுவத் தளபதி எச்சரிக்கை



“போரில் மரணித்த சாதாரண மக்களை நினைவுகூர்வதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது. அதனை வீட்டில் இருந்து செய்யலாம்.

ஆனால், பயங்கரவாத அமைப்பில் இருந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்திவிட்டு உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் மாவீரர் தின நினைவேந்தலைப் பொது வெளியில் நடத்துவதற்கு இடமளிக்க முடியாது. 03

## துணை மருத்துவ சேவை வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு

### இளைஞர், யுவதிகள் தவறாமல் விண்ணப்பியுங்கள் மாகாண சுகாதார பணிப்பாளர் வேண்டுகோள்



வடக்கு மாகாண இளைஞர், யுவதிகள் துணை மருத்துவ சேவையில் இணைந்து கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் அமைந்துள்ள நிலையில் எமது இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் விண்ணப்பிக்குமாறு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார். 03

## வலி. மேற்கு பிரதேச சபையின் பாதீடு 26 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் பாதீடு இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள வலிகாமம் மேற்கு பிரதேச பைநின் அமர்வு இன்று நடைபெற்றது.

இதன் போது சபையின் தவிசாளரால் வரவு செலவுத் திட்டம் சம்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வரவு செலவு திட்டம் மீதான விவாதம் இடம்பெற்றது.

இதன் பின்னர் இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஒருவர் மட்டும் 03

## அரியாலையில் தனிமைப்படுத்திய எவருக்கும் தொற்றில்லை

அரியாலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள 62 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவருக்கும் கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை பணிப்பாளர், மருத்துவர் 03

## நோயாளரைப் பார்வையிட இறுக்கமான நடைமுறை

### அனைவரையும் ஒத்துளைக்கக் கோருகிறார் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர்



யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடுவதற்காக பாஸ் நடைமுறை இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும் நிலையில் நோயாளர்களை பார்வையிட 03

## நினைவேந்தல் தடைக்கு கூட்டமைப்பே காரணம்



### சாடுகிறார் கஜேந்திரன் எம்.பி

நினைவேந்தலை தடுக்கும் நடவடிக்கையில் இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்களும் அவரின் அரசும்,படையினரும் பொலீசாரும் சர்வதிகாரப்போக்கில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலமை உருவாவகதற்கு முழுப் பொறுப்பினையும் கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஐக்கியநாடுகள் மனிதஉரிமை பேரவை வரை சென்று உள்நாட்டு விசாரணைக்கு சந்தர்ப்பம் கொடுத்து வெளிநாட்டு விசாரணையினை தடுத்து இந்த யுத்தக்குற்றவாளிகளுக்கு 03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# சிறந்த பெறுபேறுகளைப் பெற்றது பொஸ்கோ வித்தியாலயம்





யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் வரலாற்றில் அதிகமான மாணவர்கள் 2020ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர்.

புதித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் இம்முறை 228 மாணவர்கள் பரிட்சைக்கு தோற்றியுள்ளனர்.

குறித்த மாணவர்களில் 159 மாணவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 160 புள்ளிகள் என்ற நிலையைத் தாண்டி பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

பாடசாலையின் கடந்த கால சித்திகளுடன் ஒப்பிடும் போது வரலாற்றில் அதி உயர் சித்தியாக 70 வீதம் பதிவாகியுள்ளது.

அஞ்ஜிதன் அஜினி எனும் மாணவி 195 புள்ளிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பொறியியலாளராக வந்து வடக்கு மக்களுக்கு சேவையாற்ற விருப்பம்

பொறியியலாளராக வந்து வடக்கு மக்களுக்கு சேவையாற்ற விரும்புகின்றேன் என 2020 ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் 195 புள்ளிகளை பெற்ற மாணவன் ச.ஆர்வலன் தெரிவித்துள்ளார்.

மாணவன் தொடர்ந்து தெரிவிக்கையில்..

நான் 2020 ம் ஆண்டுதரம் 5 புலமைப் பரீட்சையில் தோற்றி 195 புள்ளிகளை பெற்றுள்ளேன் என்னைப்போல் பரீட்சைக்கு தோற்றிய எமது பாடசாலை மாணவர்கள் அதிகளவானோர் சித்தியடைந்துள்ளார்கள்

அதேபோல் இந்த பரீட்சையினை பொறுத்தவரைக்கும் பாடசாலை மற்றும் தனியார் வகுப்புக்கு சென்றாலும் வீட்டில் அதனை மீட்டு படிப்பதன் மூலமே பரீட்சையில் இலகுவாக சித்தி அடைய முடியும்.

அத்தோடு 195 புள்ளி பெறுவதற்கு உதவிய பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மற்றும் தனது பெற்றோருக்கு தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை புலமைப் பரிசில் பெறுபேற்றின் படி கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது இந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் வீதம் அதிகரித்துள்ளதாக பாடசாலையின் அதிபர் என்.மகேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 57 வீதம் மாணவர்கள் சித்தியடைந்த நிலையில் இவ்வருடம் 63 வீதமானவர்கள் பரீட்சைக்கு தோற்றி சித்தி அடைந்துள்ளார்கள் என பாடசாலை அதிபர் என்.மகேந்திரராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

## தயார் நிலையில் வைத்தியசாலைகள்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக மேலும் பல வைத்தியசாலைகள் தயார் நிலையில் உள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அசேல குணவர்தன மேலும் கூறியுள்ளதாவது, "தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக, அடையாளம் காணப்பட்ட வைத்தியசாலைகளில் 2,800 கட்டில்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மேலதிக தேவையேற்படின், குறித்த வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை நாடு முழுவதிலும் உள்ள 36 மத்திய நிலையங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் அபாயமானவை

கொழும்பில் இன்று (திங்கட்கிழமை) காலை முதல் தனிமைப்படுத்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் அபாயமுடையவை என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசங்களில் இனங்காணப்படாத தொற்றாளர்கள் இருக்கக் கூடும் என்பதன் காரணமாகவே அவை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என அந்தப் பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், மருதானை, கோட்டை, புறக்கோட்டை, கொம்பனி வீதி மற்றும் டாம் வீதி ஆகிய தனிமைப்படுத்தப்பட்டுள்ள இந்த பகுதிகள் அபாயமுடையவையாகும்.

இங்கு இனங்காணப்படாத தொற்றாளர்கள் இருக்கக் கூடும். எனினும் தொற்று வெளிப்படுவதற்கு சிறிது காலம் எடுக்கும். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடும்

எனவே குறித்த பிரதேசங்களில் இருந்து ஏனைய பகுதிகளுக்கு தொற்று பரவக் கூடாது என்பதற்காகவே அவை தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் அத்தியாவசிய தேவைக்கான சேவைகள் தடையின்றி முன்னெடுக்கப்படும். இவ்வாறான சேவைகளில் ஈடுபடுபவர்கள் அடிப்படை சுகாதார வசதிகளைப் பின்பற்ற வேண்டும்.

மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் உருவாகிய கொத்தணி தற்போது கட்டம் கட்டமாக குறைவடைந்து வருகிறது.

பேலியகொடை கொத்தணி பாரிய கொத்தணியாக உருவாகியது. இதனுடன் தொடர்புடைய தொற்றாளர்கள் நாடளாவிய ரீதியிலும் இனங்காணப்பட்டனர்.

கொழும்பு மாநகரசபை மற்றும் கம்பஹா மாவட்டத்தில் சில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளில் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும்.

தற்போது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்தால் மிக விரைவில் கட்டுப்படுத்த முடியும் என்று நம்புகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

## லொஸ்லியாவின் தந்தை உயிரிழப்பு!



பிக்பொஸ் புகழ் லொஸ்லியாவின் தந்தை கனடாவில் உயிரிழந்துள்ளார்.

பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூலம் அறிமுகமாகி அனைவராலும் அறியப்பட்டவர் நடிகை லொஸ்லியா. அந்நிகழ்ச்சி முடித்தபின் விளம்பரங்கள் உள்ளிட்ட சில திரைப்படங்களில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் லொஸ்லியாவின் தந்தை கனடாவில் உயிரிழந்துள்ளார். அவருக்கு திரையுலக பிரபலங்கள் உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## சில இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டன! சில இடங்கள் விடுவிப்பு!!

நாட்டில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களை உள்ளடக்கிய 25 பொலிஸ் அதிகார பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, கொழும்பில் 17 பொலிஸ் பிரிவுகளும் கம்பஹாவில் 7 பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு, ஏனைய பகுதிகள் தனிமைப் படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


கொழும்பு மாவட்டத்தில் தனிமைப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள 12 பொலிஸ் பிரிவுகளுக்கு மேலதிகமாக 5 பொலிஸ் பிரிவுகள் இன்று தனிமைப்படுத்தப்படும் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி புறக்கோட்டை, கோட்டை, மருதானை, கொம்பனித்தெரு, டேம் வீதி மற்றும் களனி ஆகிய பொலிஸ் அதிகார பிரதேசங்கள் இன்று (திங்கட்கிழமை) அதிகாலை 5 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த தனிமைப்படுத்தல் பகுதிகளில் இருந்து பொது மக்கள் வெளியேறவோ, உட்பிரவேசிக்கவோ முழுமையாக தடை விதிக்கப்பட்டள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்திய பகுதிகளில் தொடர்ந்தும் கொரோனா தொற்று அச்சறுத்தல் நிலவுவதன் காரணமாகவே இந்த பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அந்தப் பகுதியில் வாழும் பொது மக்கள் சுகாதார வழிமுறைகளை உரிய வகையில் பின்பற்றுவார்களாயின் விரைவில் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்க முடியும் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கூறினார்.



இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுகளில் 7 பொலிஸ் பிரிவுகளைத் தவிர ஏனையவை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தலிலிருந்து விடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய நீர்கொழும்பு, ஜாஎல, ராகமை, கடவத்தை, வத்தளை, பேலியகொடை ஆகிய 6 பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாகவே காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், குருணாகலில் குருணாகல் மாநகரசபை எல்லை மற்றும் குளியாபிட்டி பொலிஸ் பிரிவு என்பன தனிமைப் படுத்தலிலிருந்து விடுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று களுத்துறை மாவட்டத்தில் ஹொரணை, இங்கிரிய ஆகிய இரு பொலிஸ் பிரிவுகளும் வேகட படஹிர கிராம சேவகர் பிரிவு என்பன தனிமைப் படுத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றன.

மேலும் கேகாலை மாவட்டத்தில் ருவன்வெல்ல மற்றும் மாவனெல்லை ஆகிய இரு பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தலிலிருந்து விடுக்கப்பட்டுள்ளன என்பத குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளை மீள திறப்பது முடிவில்லை

கொரோனா தொற்று பரவிவரும் நிலையில், பாடசாலைகளை எதிர்வரும் 23 ஆம் திகதி மீளத் திறப்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஜீ.எல்.பீரிஸ் மேலும் கூறியுள்ளதாவது,

“நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை களையும் மூன்றாம் தவணைக்காக திறப்பது தொடர்பாக தொடர்ந்தும் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

நவம்பர் 9ஆம் திகதி திறக்கப்பட வேண்டிய பாடசாலை, இரண்டு வாரங்கள் பிற்போடப்பட்டு நவம்பர் 23ஆம் திகதி திறக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

அதேபோன்று, க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சைகள் அடுத்தாண்டு ஜனவரி 18ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை நடத்த திட்டமிட்டுள்ளோம்

இந்த நிலையில், கொரோனா தொற்று பரவிவரும் நிலையில், அடுத்த 23ஆம் திகதி பாடசாலையை மீளத் திறப்பதா - இல்லையா என்பது தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகிறோம்.

மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு, எதிர்க்காலத்தைக் கருத்திற்கொண்டே நாம் இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்கவுள்ளோம்.

இதற்காக நிபுணர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆலோசனையைப் பெற்றே நாம் நடவடிக்கை எடுக்கவுள் ளோம்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## காரத்திகை 27...

அதை மீறி நடத்தினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.”

இவ்வாறு இன்று எச்சரிக்கை விடுத்துள்ளார் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறையில் உள்ளது.

மக்கள் ஒன்று கூடுவது தொடர்பில் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி நடைமுறைகளை மீறி ஏனையோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பொதுவெளியில் எவராவது செய்யப்பட்டால் அவர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

போரில் மரணித்த சாதாரண மக்களை நினைவு கூர்வதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது.

அதனை வீட்டில் இருந்து செய்யலாம். ஆனால், பயங்கரவாத அமைப்பில் இருந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்திவிட்டு உயிரிழந்தவர்களை அதுவும் பொது வெளியில் குழுக்களாக இணைந்து நினைவுகூர்வது ஏற்புடைய நடவடிக்கையாக இருக்காது. உலகில் எந்தவொரு நாடும் இதற்கு அனுமதி வழங்காது.

எனவே, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையிலும்,

அவ்வமைப்புக்குப் பரப்புரை செய்யும் நோக்கிலும் பொதுவெளியில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படுமானால் - சுகாதாரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்” - என்றார்.

## நினைவேந்தல் தடைக்கு...

எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணை உருவாகுவதை தடுத்து அவர்களை பாதுகாத்து பதவி ஏறுவதற்கு துணை நின்றவர்கள்தான் முழுப்பொறுப்பினையும் ஏற்கவேண்டும். என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

16.11.2020 முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் உள்ள வன்னிவிளாங்குளும் மாவீரர் துயிலும் இல்ல சிரமதான பணிகள் இன்று நடைபெற்ற போது அவர் இதனை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் மக்கள் தற்போதுள்ள கொரோனா ஆபத்து அழிவும் நிலவியுள்ள இந்த காலகட்டத்தில் சட்டதிட்டங்களை மதித்து அதனை கடைப்பிடித்து நினைவேந்தலை மேற்கொள்ள மக்கள் தயாராக வேண்டும்.

இன்று தமிழ்மக்கள் வடக்கு கிழக்கில் இருந்து மொட்டுகட்சி சுதந்திரகட்சி சார்பாக பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு இந்த அரசிற்கு முண்டு கொடுத்துக்கொண்டிருக்கின்ற தமிழ் பிரதிநிதிகள் அரசிற்கு ஒத்துளைப்பு வழங்குவதும் இந்த ஒடுக்கு முறையினை அரசாங்கம் துணிந்து செய்வதற்கான வாய்ப்புக்களை கொடுத்துக்கொண்டிருக்கின்றது இதனை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## துணை மருத்துவ...

குறித்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்தி குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, சுகாதார அமைச்சினால் துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த ஒன்பது பதவி நிலைகளுக்கும் (பாடசாலை பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர்,

கண் தொழிலநுட்பவியலாளர், செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர், பொது சுகாதார பரிசோதகர், இதயத்துடிப்பு பதிவாளர், மூளை மின் இயக்கப் பதிவாளர், பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், பல் தொழில்நுட்பவியலாளர்),

நிறைவுகாண் மருத்துவ சேவையைச் சேர்ந்த மூன்று பதவி நிலைகளுக்கும் (மருந்தாளர், தொழில்சார் சிகிச்சையாளர், கதிரியலாளர்) ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பதவிகளுக்கு விண்ணப்ப முடிவுத் திகதி நவம்பர் 30, 2020 என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்களை http://www.health.gov.lk என்ற சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பார்வையிடலாம். ஆள்சேர்ப்பிற்காக 2017/2018 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இவர்கள் சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் www.health.gov.lkஊடாக மாத்திரமே இதற்றாக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இணையம் மூலமாக விண்ணப்பிப்பதற்கு உதவுவதற்காக வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பதற்கு உதவி தேவையானவர்கள் அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை தேவையான ஆவணங்களுடன் செல்வதன் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் ஒன்றரை தொடக்கம் இரண்டு வருடங்களிற்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்குரிய பயிற்சி நெறிகளுக்கு உள்வாங்கப்படுவர். பயிற்சி ஆரம்பிக்கும் காலத்திலிருந்து அனைவருக்கும் கொடுப்பனவாக கணிசமான தொகை வழங்கப்படும்.

பயிற்சியின் நிறைவின்போது சித்தியடையும் அனைவருக்கும் நியமனம் வழங்கப்படும். மிக முக்கியமாக ஆள்சேர்ப்பின்போது மாகாண மற்றும் மாவட்ட கோட்டாக்கள் (ஒதுக்கீடுகள்) ஒதுக்கப்பட்டுள்ளன. அதனால் வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கான வாய்ப்புகள் அதிகம்.

அத்துடன் வடமாகாணத்தில் இந்த மருத்துவ சேவைகள் சார்ந்த பதவி நிலைகளுக்கு பெருமளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே தகுதி வாய்ந்த அனைவரும் உடனடியாக விண்ணப்பிப்பதன் மூலம் அரசாங்க வேலை வாய்ப்பினையும் மக்களுக்கு சேவையாற்றும்

சந்தர்ப்பத்தினையும் பெற்றுக்கொள்ளலாம் என்றுள்ளது.

## வலி. மேற்கு...

வரவு செலவு எலவுத் திட்டத்தை எதிர்க்க ஏனைய அனைவரதும் ஆதரவுடன் வரவு செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

25 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து வருகின்றது.

இங்கு கூட்டமைப்பில் 9, முன்னணியில் 6, ஈபிடிபி 4, ஐ.தே.க 3, சுயேட்கைக்குழு 2 உறுப்பினர்கள் என மொத்தமாக 24 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

ஆயினும் சபையின் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் மட்டும் எதிராக வாக்களித்தார். இதனால் 24 மேலதிக வாக்குகளால் வரவு செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

## அரியாலையில்...

த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

லண்டனுக்கு பயணம் செய்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்றிருந்த ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமானவர்கள் மற்றும் தொடர்புடையவர்கள் என 62 பேர் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அரியாலையில் தங்கியிருந்த அவர், கடந்த 9ஆம் திகதி கொழும்புக்குச் சென்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒப்படைப்பதற்காக கடந்த 11ஆம் திகதி புதன்கிழமை பிசிஆர் பரிசோதனை செய்த போது, கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப் பட்டது.

அதனால் அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அரியாலையில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின் பிரகாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரினால் இந்த சுயதனிமைப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அவ்வாறு சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களின் மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் இன்று பிசிஆர் பரிசோதனை செய்யப்பட்டது. அவர்கள் அனைவருக்கும் எதிர்மறையான அறிக்கை கிடைத்ததால் கோரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, அத்துடன், வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவருக்கும் கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்ட வவுனியா பம்பைமடுவைச் சேர்ந்த பெண் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவரிடம் பெறப்பட்ட மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்திய போது, அவருக்கு கோரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

## வவுனியாவில்...

விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றார் அவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய பரிசோதனைக்கு உட்பட்டவர்கள் எவருக்கும் தொற்று இல்லை. இன்றைய பரிசோதனையில வடக்கு மாகாணத்தில் ஏனையவர்களுக்கு Covid-19 தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

## நோயாளரைப் பார்வையிட...

வருவோர் அதனை பின்பற்றுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி கூறியுள்ளார்.

வைத்தியசாலையில் பாஸ் இல்லாமல் நோயாளர்களைப் பார்வையிட வந்தோர் வைத்தியசாலைக்கு வெளியில் பல மணிநேரம் கால்கடுக்க காத்து நின்ற சம்பவம் 15/11/2020 ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது இது தொடர்பாக நோயாளரை பார்க்க வந்தவர்கள் கருத்து தெரிவிக்கையில்

முன்பு நோயாளர்களை பார்வையிட பாஸ் வைத்திருப்போரை அனுமதித்த பின்னர் பாஸ் இல்லாதவர்களையும் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின்னர் அனுமதிக்கும் வழமை காணப்பட்டது. தற்போது அந்த நடைமுறையில்லை என தெரிவிக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

தூர இடங்களிலிருந்து நோயாளர்களை பார்க்க வருபவர்கள் நோயாளருடன் தங்கியிருந்த உறவினர் வீடு சென்றதால் தம்மால் உரிய அனுமதி அட்டையை (பாஸ்) பெற முடியாமல் போய் விட்டது எனவும் இதேவேளை தூர இடங்களில் இருந்து வரும் தங்களை பாதுகாப்பு கடமையில் உள்ள சில ஊழியர்கள்

மரியாதை இன்றி தரக்குறைவாக பேசுவதாகவும் தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளர் கருத்து தெரிவிக்கும்போது கொரோணா சூழ்நிலை காரணமாக நோயாளர்களைப் பார்வையிடுவோரை மட்டுப்படுத்துவதற்காக

பாஸ் நடைமுறை இறுக்கமாக பார்க்கப்படுவதாகவும் இதற்கு நோயாளர்களை பார்வையிட வருவோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இளைஞர்களுக்கு குறைந்த வட்டியுடன் வணிகக் கடன்

சிறு தொழில் நிறுவனங்களைத் தொடங்க திட்டமிட்டுள்ள இளைஞர்களுக்கு அரச வங்கிகள் மூலம் குறைந்த வட்டியுடன் வணிகக் கடன்களை பெற்றுக்கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடி வருகின்றார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, “அண்மையில் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டபோது, இளைஞர்கள் வணிக கடன்களுக்கு விண்ணப்பிக்கும்போது தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எனக்குத் தெரிவித்தனர்.

இந்நிலையில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மூலம், இளைஞர்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் இன்றி நிதி உதவியைப் பெற உதவும் ஒரு கடன் திட்டத்தை வடிவமைக்க இலங்கை மத்திய வங்கியுடன் அமைச்சு கலந்துரையாடல்களைத் தொடங்கியுள்ளது” என கூறினார்.

தற்போது, தனியார் மற்றும் அரச வங்கிகளில் இந்த கடன்களுக்கான வட்டி மிகவும் அதிகமானது என குறிப்பிட்டுள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இது சிறு நிறுவன உரிமையாளர்களுக்கு செலுத்த முடியாமல் போகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

2021 வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி கடன் திட்டத்தை நிறுவ அமைச்சு போதுமான நிதியை ஒதுக்குகிறது, இதனால் இளைஞர்களுக்கு இலகுவாக வணிக கடன்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வில்பத்து காடழிப்பு சட்டவிரோதமானது!

## சொந்த நிதியில் மரங்களை நட ரிஷாட்க்கு பணிப்பு!



வில்பத்து சரணாலயத்தை அண்மித்த கல்லாறு பகுதியில் 1000 ஏக்கர் காட்டினை அழித்தமை சட்டவிரோதமானது என மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று (திங்கட்கிழமை) உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் முழுப் பகுதியையும் மறுகட்டமைக்க தனிப்பட்ட நிதியைப் பயன்படுத்தவும் ரிஷாட் பதியுதீனுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


வில்பத்து சரணாலயத்தை அண்மித்த கல்லாறு பகுதியில் 1000 ஏக்கர் காட்டினை அழித்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீள்குடியமர்த்தும் நோக்கில் நடவடிக்கை எடுத்தமைக்கு எதிராக சுற்றாடல் நீதிக்கான நிலையம் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தது.

குறித்த வழக்கின் பிரதிவாதிகளாக முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வன பாதுகாப்பு திணைக்களம் உள்ளிட்ட தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர்.

வில்பத்து சரணாலயத்தின் கல்லாறு வனப்பகுதியில் 2388 ஏக்கரை அழித்ததன் ஊடாக பாரிய சூழல் அழிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த வனப்பகுதியை மேலும் அழித்து மேற்கொள்ளப்படும் அனுமதியற்ற குடியேற்றங்களைத் தடுப்பதற்கான தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி சுற்றாடல் நீதிக்கான நிலையம் மனுவை தாக்கல் செய்திருந்தது.

# கொரோனா பாதிப்பு பட்டியலில் 100ஆவது இடத்திற்கு வந்தது இலங்கை!



நாட்டில் நேற்று 704 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 788ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 287ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று மட்டும் 171 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை பதினொராயிரத்து 495 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 734 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் இன்று ஐவர் கொரோனா தொற்றினால் மரணித்துள்ள நிலையில் மொத்த மரணங்கள் 58ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாவின் மூன்றாம் அலையினைத் தொடர்ந்து ஏற்பட்ட வைரஸ் பரவலினால் உலகளாவில் 134ஆவது இடத்தில் இருந்த இலங்கை தற்போது 100 ஆவது இடத்திற்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாகன இறக்குமதிக்கு தடை:

## ஜனாதிபதியுடன் கலந்துரையாட தீர்மானம்

வாகன இறக்குமதி தடையின் விளைவாக அந்நிய செலாவணி இழப்பு குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவிக்க வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அவருடனான சந்திப்பிற்காக காத்திருக்கின்றது.

இந்த மாத இறுதிக்குள் ஜனாதிபதியுடன் சந்தித்து கலந்துரையாடுவோம் என்ற நம்பிக்கை உள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் சிரிஷாந்த கமகே கூறியுள்ளார்.

ஜனாதிபதியை சந்தித்து வாகன இறக்குமதி தடை குறித்து கலந்துரையாடவும் கோரியுள்போதும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக அது தாமதமாகிவிட்டது என்றும் நவம்பர் இறுதிக்குள் அவரை சந்திக்க முடியும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வாகன இறக்குமதி மீதான தடை மூலம் அந்நிய செலாவணி இழப்புகள் இருப்பதை விட அதிகமாக இருக்கும் என்பதை ஜனாதிபதிக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகன இறக்குமதியை தடை மூலம் சுமார் 1 பில்லியன் ரூபாய் அந்நிய செலாவணி சேமிக்கப்படும் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

ஆனால் உண்மையில், தடையின் நேரடி விளைவாக நாடு சுமார் 2 பில்லியனை இழந்து வருகிறது என்றும் வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் சிரிஷாந்த கமகே சுட்டிக்காட்டியுள்ளார்.

# 15 நாட்களில் கொரோனா வைரஸால் 45 மரணங்கள்

நாட்டில் கடந்த 15 நாட்களில் கொரோனா வைரஸ் தொற்றால் 45 மரணங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி வரையில் 13 கொரோனா மரணங்களே பதிவாகியிருந்த நிலையில், சடுதியாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கொரோனா வைரஸ் தொற்றினால் மூன்றாவது முறையாகவும் நேற்று ஒரே நாளில் 5 மரணங்கள் பதிவாகின.

இந்த மரணங்கள் அனைத்தும் கொழும்பு மாநகர எல்லைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

கொழும்பு 13 ஜிந்துபிட்டியைச் சேர்ந்த 54 வயதுடைய ஆணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

நீண்டகாலமாக காணப்பட்ட புற்று நோய் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியும் மரணத்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் கொழும்பு 15ஐச் சேர்ந்த 39 வயதுடைய ஆணொருவரும் கொரோனாவால் மரணித்தார். அவர் கொரோனா தொற்று உறுதியானவர் என அடையாளம் காணப்பட்டதையடுத்து, ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் மரணித்துள்ளார்.

புற்றுநோய் மற்றும் கொரோனா வைரஸால் ஏற்பட்ட நியூமோனியா காரணமாக இந்த மரணம் சம்பவித்துள்ளது.



இதேவேளை கொழும்பு 12ஐச் சேர்ந்த 88 வயதான ஆணொருவரும் மரணித்தார். இருதய கோளாறு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவரின் மரணம் சம்பவித்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றால் அவர் மரணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் கொழும்பு - 8 பொறளையை சேர்ந்த 79 வயதான ஆணொருவர் தனது வீட்டிலேயே உயிரிழந்தார். கொரோனா வைரஸ் தொற்றால் நுரையீரலில் ஏற்பட்ட பாதிப்பே மரணத்திற்கான காரணமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் கொழும்பு - 13 ஐ சேர்ந்த 88 வயதான ஆணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்தார்.

கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட மாரடைப்பே இந்த மரணத்திற்கு காரணம் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.